பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 20 செவ்வாய்க்கிழமை 03.01.2023 கதிர் 59

**இது ரகசியம் அல்ல!**

இன்று இரண்டு குட்டி கதைகள் பற்றிய குறிப்புடன் என் கருத்தைக் கூற விழைகிறேன்.

அது யமதர்மராஜாவின் சபை. அன்று உயிர்கள் எடுக்கப்பட்டவர்களை வரிசையாக நிறுத்தி, அவர்கள் பற்றிய பாவ, புண்ணியக் கணக்கு

2

# தேர்தலை பிற்போட முடியாது!

## ஜி.எல்.பீரிஸ் திட்டவட்டம்



கொழும்பு.ஜனவரி 03

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்குக் கிடையாது. தேர்தலை பிற்போட வேண்டுமாயின் மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளது.

2



## மகாவலி ஆற்றில் இளைஞன் மாயம்

மகாவலி ஆற்றின் ஹக்கிந்த, வராதென்ன பகுதியில் இளைஞர் ஒருவர் ஆற்றில் இறங்கிய சமயம் காணாமல் போயுள்ளார் எனக் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டில், தனது நண்பர்கள் குழுவுடன் மகாவலி ஆற்றின் வராதென்ன பகுதியில் உள்ள பாறையில்

2

## எரிபொருள்களின் விலை குறைப்பு!

நேற்றுநள்ளிரவுமுதல்நடைமுறைக்கு வரும் வகையில் இரண்டு வகையான எரிபொருள்களின் விலையை குறைக்க இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒட்டோ டீசலின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மண்ணெண்ணெய்

11


## குமார் நடேசனுக்கு இந்திய உயர் விருது



இலங்கையின் சமூகத் தலைவரும் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டின் முகாமைத்துவப் பணிப்பாளருமான சிவகுமார்நடேசனுக்கு இந்தியாவின் மதிப்புமிக்க பிரவாசி பாரதிய சம்மான் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

11

## முட்டை இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி



முட்டைகளை இறக்குமதிசெய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தேவைக்கு ஏற்ப போதுமான முட்டைகளை உற்பத்தி செய்ய முடியாவிட்டால், அதிகரித்து வரும் விலையைக் கட்டுப்படுத்த தற்காலிக நடவடிக்கையாக முட்டைகளை இறக்குமதிசெய்யவேண்டுமென அகில இலங்கை

11

# இலங்கையின் நெருக்கடியைத் தீர்க்க நாணய நிதியம் கடுமையான முயற்சி

## அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவிப்பு



வொஷிங்டன்,ஜனவரி03

இலங்கை உள்ளிட்ட கடன் நெருக்கடியை எதிர்நோக்கும் நாடுகளுக்கு தீர்வைக்கொண்டுவரசர்வதேசநாணய நிதியம் கடுமையாக உழைத்து வருவதாக அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோஜியேவா தெரிவித்துள்ளார். அமெரிக்கசி.பி.எஸ். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் இதனை கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியின் ஒரு பகுதி வருமாறு:-

கேள்வி - சர்வதேச நாணய நிதியம் தெரிவிக்கும் வகையில் குறைந்த வருமானம் கொண்ட பல நாடுகள் கடன் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளமை உலக நிதி நெருக்கடியில் எவ்வாறான தாக்கத்தை


11

## மின் கட்டண உயர்வு விடயம் அமைச்சரவை ஒத்திவைப்பு

உத்தேச மின்சார கட்டண திருத்தம் அடங்கிய அமைச்சரவை பத்திரம் அமைச்சரவை கூட்டத்தில் அமைச்சர் கஞ்சன விஜேசேகரவினால் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், அது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுப்பது அடுத்த வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அறிய வந்தது.

## விளையாட்டுத் துறை அமைச்சின் செயலராக மகேசன் பதவியேற்பு



விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக கணபதிப்பிள்ளை மகேசன் நேற்று பதவியேற்றார், முன்னாள் செயலாளர் கலாநிதி அமல் ஹர் டி சில்வா, அமைச்சின் மேலதிக செயலாளர்கள் மற்றும் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

11

## ஊழியர்கள் பற்றாக்குறைவினால் 11 ரயில் சேவைகள் நேற்று ரத்து!



இலங்கை ரயில் சேவையில் பணி புரியும் ஊழியர்களின் ஓய்வு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளால் நேற்றுக் காலை திட்டமிடப்பட்டிருந்த 11 ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டன.

இது தொடர்பான பிரச்சினைக்கு நேற்றுத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக போக்குவரத்து

11

## அமெரிக்க குடியுரிமைக்கு மீண்டும் விண்ணப்பித்துள்ளாராம் கோட்டா



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது அமெரிக்க குடியுரிமைக்கு மீண்டும் விண்ணப்பித்துள்ளார் என ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ராஜபக்ஷ தனது குடும்பத்தினருடன் டிசம்பர் 2022 இல் இலங்கையை விட்டு வெளியேறினார். தற்போது விடுமுறையில் டுபாயில் இருக்கிறார்.

அவர் டுபாய் வழியாக அமெரிக்கா சென்றார் என முதலில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் கோட்டாபய

11

## 44 ரயில் நிலையங்களுக்கு இன்று அதிபர் நியமனங்கள்

44 ரயில் நிலையங்களுக்கு அதிபர்கள் இன்று சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 50 நிலைய அதிபர்களை பணியமர்த்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகரயில்வேபொதுமுகாமையாளர் டபிள்யூ.டி.எஸ்.குணசிங்க தெரிவித்துள்ளார்.

44 நிலைய அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று கையளிக்கப்படவுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குகளைக் கூறி, அறிமுகப்படுத்துகிறார் சித்திரகுப்தனார்.

"இவர் ஒருவர்த்தகர். கலப்படவியாபாரி. அதன் மூலம் பல நூறு பொதுமக்களை கொன்று எங்கள் வேலையை இலகுபடுத்தியவர்" என்றார் சித்திரகுப்தனார். யமதர்மர் தமது ஆசனத்தில் இருந்து இறங்கி வந்து, அந்தக் கலப்பட வியாபாரியைக் கட்டியணைத்து, நன்றி கூறினார்.

அடுத்து, ஒரு போலி வைத்தியர். "இவரின் போலி வைத்தியத்தினால் பல நூறு பொதுமக்களை உரிய நேரத்தில் எமலோகம் கொண்டு வர முடிந்தது" – என்று கணக்குக் கூறப்பட்டது. யமன் மீண்டும் ஆசனத்தில் இருந்து இறங்கிவந்து அந்தப் போலி வைத்தியரையும் கட்டியணைத்து நன்றி கூறினார்.

இதே போல போதைப் பொருள் வர்த்தகர், ஊழல் அதிகாரிகள் எல்லோருக்கும் கட்டியணைத்து நன்றி சொன்னார் யமன்.

கடைசியாக ஓர் அரசியல்வாதி.

"இவர் நாட்டில் பெருங்குழப்பங்கள், களேபரங்களை ஏற்படுத்தி, பல்லாயிரம் பேர் உயிரிழக்க வசதி செய்து தந்தவர்" – என்று பெருநன்றியோடு குறிப்பிட்டார் சித்திரகுப்தனார்.

இந்தத் தடவை யமதர்மராஜன் தமது ஆசனத்தில் இருந்து இறங்கி வரவில்லை. ஆசனத்தில் இருந்தபடி அரசியல்வாதியை பார்த்து "நன்றி! பெரும் நன்றி!!" என்றார்.

சித்திரகுப்தனாருக்கு விளங்கவில்லை. பல்லாயிரம் பேரின் உயிர்களைக் கவர்வதற்கு உதவிய அரசியல்வாதியை யமன் மதிக்கவில்லை என்ற விசனம் அவருக்கு. நேரடியாகவே யமனிடம் கேட்டு விட்டார்.

"இவருக்கு மட்டும் ஏன் இறங்கி வந்து, கட்டி அணைத்து நன்றி தெரிவிக்கவில்லை?" – என்று நேரடியாகவே கேட்டார் சித்திரகுப்தனார்.

"ஐயைய்யோ... இவனை நம்பி ஆசனத்தை விட்டு நான் இறங்கி வந்தால், என் ஆசனத்தில் குந்தி விடுவான். எனக்கு வேண்டாம் அந்தச் சிக்கல்...!" – என்று சத்தமிட்டார் எமன்.

அப்படி கிடைக்கின்ற பதவியாசனத்தில் பாய்ந்து இருக்கக் கூடிய அரசியல்வாதிகள் பற்றிய கதைதான் இன்று.

அதற்கு அச்சாரம் வைப்பது போல இன்னொரு தகவல். முன்னரும் ஒரு தடவை இப்பத்தியில் விளக்கி இருக்கிறேன். கொழும்பில் நான் நீதிமன்ற செய்தியாளனாக இருந்த போது ஏற்பட்ட அனுபவம் அது.

எண்பதுகளின் ஆரம்பம். ஜே.ஆரின் ஆட்சி. பிரதான எதிர்க்கட்சியான சு.க. இப்போது போல பிளவு பட்டுக் கிடந்தது. ஒரு புறம் சிறிமாவோ பண்டாரநாயக்கா தரப்பு. மறுபுறம் அவரது மகன் அனுரா பண்டாரநாயக்காவும் மூத்த சு.க. தலைவர்களும்.

கட்சியின் தலைமைத்துவப் போட்டி கட்சியின் தலைமையகம் யாருக்குரியது என்று இழுபறியாகி, உயர் நீதிமன்றம் வரை வழக்குச் சென்று விட்டது.

வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் சுப்பையா சர்வானந்தா. ஒரு பக்கத்துக்கு சட்டத்தரணி தியாகலிங்கம் கியூ.ஸி. மற்றப் பக்கத்துக்கு சட்டத்தரணி நவரத்தினராஜா கியூ.ஸி. நீதிமன்றத்துக்கு உதவுவதற்காக 'அமிக்கஸ் கூரே'யாக சட்டமா அதிபரை அழைத்திருந்தது நீதிமன்றம். அவர் சிவா பசுபதி.

ஆக சிங்களக் கட்சியின் உட்கட்சிச் சண்டை உச்சத்தில். ஆனால் விலக்குப் பிடிக்கவும், விசாரிக்கவும் தமிழ்ப் பிரமுகர்கள்.

அதுபோன்ற நிலை பற்றித்தான் இன்று கூறப்போகிறேன்.

இனி விடயத்துக்கு வருவோம்.

வரும் தைப்பொங்கல் தினத்துக்கு முதல் நாள் – 14 ஆம் திகதி – இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாகிகள் தெரிவு. ஆறு மாதத்துக்கான உத்தியோகத்தர் தெரிவுதான். அடுத்த ஜூனில் அடுத்த வருடாந்தப் பொதுக்கூட்டம் காத்திருக்கிறது. அதுவரையான நிர்வாகிகள் தெரிவுக்குத்தான் இப்போது இழுபறி. நாடு முழுவதும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட உதைபந்தாட்ட லீக்குகள் வாக்களித்து நிர்வாகிகளைத் தேர்வு செய்ய வேண்டும்.

வழமை போல இரு தென்னிலங்கை குழுக்கள் களத்தில். ஒருபுறம் விளையாட்டுத் துறை அமைச்சருக்கு ஆலவட்டம் பிடிக்கும் குழு. மறுபுறம் வழமையாக சம்மேளனத்தை நிர்வகிக்கும் குழுவினர்.

சண்டை – முரண்பாடு – என்னவோ பெரும்பான்மையினரான அவர்களுக்கிடையேதான். ஆனால் முன்னணி வேட்பாளர்கள் என்னவோ நம்மவர்கள். கிடைக்கும் பதவி ஆசனத்தில் குந்தி விடுவார்கள் என யமதர்மராஜாவே அஞ்சும் அரசியல்வாதிகள்.

அவர்களில் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டதும் நமது அரசியல் விமர்சகர் ஒருவர் "உதைபந்தாட்டம் அவ்வளவுதான். தொலைந்தது. 'ஆமை புகுந்த வீடும், அமீனா புகுந்த வீடும் விளங்கவே விளங்காது' என்பார்கள். உதைபந்தாட்டத் துறையின் கதையும் அதேதான்" என்று துள்ளிக் குதித்தார்.

வழமையாக உதைபந்தாட்ட நிர்வாகத்தில் முன்னணியில் நிற்கும் ஒருவரை விளையாட்டுத் துறை அமைச்சரின் ஒழுங்கு விதி ஏற்பாடுகளின் கீழ் போட்டிக்குத் தகுதியற்றவராக்கி, மற்றத் தரப்பு வேட்பாளரை தலைவராகத் தேர்வாக்கத் திட்டம் இருப்பதாகத் தெரிகிறது.

வழமையான நிர்வாகி தரப்பில் தமிழ் அரசியல்வாதி ஒருவரை தலைவர், துணைத் தலைவர், செயலாளர் ஆகிய எல்லா பதவிகளுக்கும் வேட்புமனுத் தாக்கல் செய்ய வைத்துள்ளனர். தங்கள் தரப்பில் தலைவர் வேட்பாளர் தகுதி நீக்க செய்யப்பட்டால், இவர்தான் தலைமை பதவிக்கு போட்டியிடுவார். இல்லையேல் துணைத்தலைவர் அல்லது செயலாளர் பதவிக்கு. இப்போது அவர் துணைத் தலைவர் பதவியில் இருக்கிறார். அவர் யார் தெரியுமா? நமது முன்னாள் யாழ் மேயர் ஆர்னோல்ட்தான்.

மறுபக்கத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆதரவு பெற்ற தலைவர் வேட்பாளர் – நமது முன்னாள் எம்.பி., 'மின்னல்' நிகழ்ச்சி புகழ் ஸ்ரீரங்கா.

எனக்குத் தெரிய வடக்கில் பல்கலைக்கழகம், யாழ் மாவட்ட தெரிவு அணி என்று கொடி கட்டி பறந்த உதைப்பந்தாட்ட வீரர் ஆர்னோல்ட். ரங்காவின் உதை பந்தாட்ட தொடர்பு தெரியவில்லை.

உதைபந்தாட்டத்தை நிர்வாகிக்க, உதைபந்தாட்டம் விளையாடத் தெரிந்திருக்க வேண்டுமா, என்ன?

இந்த விடயத்தை ஒட்டி பல விவகாரங்களைப் பிய்த்துதற முடியும். எனினும் விட்டு விடுகிறேன். நானும் இலங்கைத் தேசிய இளைஞர் மட்டத்தில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய – ஒரு காலத்தில் ரசிகர் பட்டாளத்தைக் கொண்டிருந்த – உதைபந்தாட்ட வீரன்தான். அது பழங்கதை.

பதவி ஆசனம் கிடைத்தால் அவற்றுக்கு நமது அரசியல்வாதிகள் எப்போதும் தயார். யமன் அஞ்சுவதும் சரிதான்.

சண்டை – முரண்பாடு – அவர்களுக்குள். விலக்குப் பிடிக்கவும், விலக்கி நிமிரவும், இடையில் நாங்கள்...!

**- மின்னல் -**

## தேர்தலை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதை தவிர மாற்று வழியேதும் அரசாங்கத்திற்கு இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் குறிப்பிட்டதாவது:–

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் உரிய காலத்தில் நடக்குமா அல்லது அரசியல் சூழ்ச்சிகளினால் தேர்தல் பிற்போடப்படுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் திகதியை இவ்வாரம் உத்தியோகப்பூர்வமாக அறிவிப்பதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியானவுடன் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கை அரசியலமைப்பின் பிரகாரம் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படும்.

எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் 340 உள்ளூராட்சி மன்றங்களும் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

அவ்வாறாயின் பெப்ரவரி மாதம் இறுதி பகுதிக்கும்,மார்ச் மாதம் முதல் பகுதிக்கும் இடையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அரசமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்த உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.தேர்தலை பிற்போட வேண்டுமாயின் அரசாங்கம் அதற்கான நடவடிக்கையை நாடாளுமன்ற மட்டத்தில் முன்னெடுக்கலாம் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளதாக அறிய முடிகிறது. தேர்தலை பிற்போடும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இல்லை.

தவிர்க்க முடியாத காரணத்தை தவிர தேர்தலை பிற்போடும் உரிமை அரசாங்கத்திற்கு இல்லை. ஏற்கனவே ஒரு வருடம் பிற்போடப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் பிற்போடுவதற்கான தேவை ஏதும் கிடையாது. தேர்தலை பிற்போட வேண்டுமாயின் அதற்கு மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பு வழங்கியுள்ளது.

தேர்தலைப் பிற்போட நாட்டு மக்கள் ஒருபோதும் இணக்கம் தெரிவிக்கமாட்டார்கள். தேர்தல் ஒன்றையே மக்கள் கோரியுள்ளார்கள். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் வீழ்ச்சி ஆரம்பமாகும்.

நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கத்தின் அனைத்து தீர்மானங்களும் காணப்படுகிறது.

மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பது பொருளாதார நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும். சுமைகளை தாங்கிக் கொள்ள ஓர் எல்லை உண்டு. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கினால் நாட்டில் மீண்டும் அமைதியற்ற தன்மை நிலவும். – என்றார்.

## மகாவலி ஆற்றில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உல்லாசமாக இருந்தபோது, முகம் கழுவுவதற்காக ஆற்றில் இறங்கிய இளைஞன், திடீரென நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார்.

கண்டி ஹல்லோலுவ பகுதியை சேர்ந்த ரவிந்து லக்ஷித விஜேசிங்க என்ற 29 வயதுடைய இளைஞனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

காணாமல் போன இளைஞனை பொலிஸ் உயிர்காப்புக் குழுவினர் மற்றும் பிரதேசவாசிகள் தேடிய போதும் நேற்றுப் பிற்பகல் வரை அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

மகாவலி ஆற்றில் மிகவும் ஆபத்தான இடமாக கருதப்படும் இந்த இடத்தில் நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாகியுள்ளன எனப் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த இளைஞனை தேடும் பணியில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622






# நடுத்தர மக்களை நெருக்கடிகளுக்குள்ளாக்கி 77 ஆயிரத்து 700 கோடி ரூபா ஈட்ட எதிர்பார்ப்பு!

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு சுட்டிக்காட்டு

மின்கட்டண திருத்தம் ஊடாக 77 ஆயிரத்து 700 கோடி ரூபா வருமா னத்தை திரட்டிக் கொள்ள மின்சார சபை எதிர்பார்த்துள்ளது.

நடுத்தர வருமானம் பெறும் 50 லட்சம் மின்பாவனையாளர்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மின்கட்டணத்தை அதிகரிக்கும் முயற்சியை அரசாங்கம் கைவிட வேண்டும்.

முறையாக செயற்படாவிட்டால் முட்டைக்கு நேர்ந்துள்ள கதியே மின்சாரத்துக்கு நேரிடும் என இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கைபொதுப்பயன்பாட்டுஆணைக் குழுவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

இலங்கைபொதுப்பயன்பாட்டுஆணைக் குழுவுக்கு மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் எவ்வித பரிந்துரைகளையும் மின்சாரத்துறை அமைச்சு முன்வைக்கவில்லை.

பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவின் சட்டத்துக்கு அப்பாற்பட்ட வகையில் மின்கட்டணத்தை அதிகரிக்கும் யோசனையை மின்சாரத்துறை அமைச்சர் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேன்மேலும் நெருக்கடிக் குள்ளாக்கும் வகையில் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பது நியாயமற்றது.

சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறைக்கான மின்கட்டணத்தை 125 சதவீதத்தாலும், பெரு தொழிற்துறைக்கான மின்கட்டணத்தை 150 சதவீதத்தாலும் சுற்றுலாத் துறைக்கான மின்கட்டணத்தை 150 சதவீதத்தாலும் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் (2022) ஓகஸ்ட் மாதம் மின்கட்டணம் நூற்றுக்கு 75 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டதால் மின்பாவனைக்கான கேள்வி நூற்றுக்கு 15 சதவீதத்தால் குறைவடைந்தது, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறை பாதிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் மின்கட்ட ணத்தை மீண்டும் அதிகரித்தால் மின்பாவ னைக்கான கேள்வி முழுமையாகக் குறைவடையும்.

நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மின்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆணைக்குழுவிற்கு முரணாக மின்கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டது. இதனால் இலங்கை மின்சார சபை 22 ஆயிரம் கோடி ரூபா இலாபம் அடைந்து. இலாபத்தை காட்டிலும் நட்டம் அதிகமாக உள்ளது என மின்சார சபை குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்து இவ்வருடம் 77 ஆயிரத்து 700 கோடி ரூபா வருமானத்தை பெற்றுக்கொள்ள இலங்கை மின்சார சபை உத்தேசித்துள்ளது.

இந்த இலாபத்தில் 10 ஆயிரம் கோடி ரூபாவை நடுத்தர வருமானம் பெறும் 50 லட்சம் மின்பாவனையாளர்களிடமிருந்து அறவிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

குறைந்த மின் அலகுகளைப் பாவிக்கும் மின்பாவனையாளர்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மின்கட்டணத்தை திருத்தம் செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

முட்டை பிரச்சினை நாட்டில் பெரும் பிரச்சினையாகவுள்ளது. முட்டை விலை அதிகரிப்பைத் தொடர்ந்து முட்டை மாபியாக்கள் முட்டைகளை பதுக்கி அதிக விலைக்கு விற்கிறார்கள், முட்டைக்கு கட்டுப்பாட்டு விலையைக் கூட அரசாங்கத்தால் நிர்ணயிக்க முடியாத நிலை காணப்படுகிறது. பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் சட்டத்துக்கு அமைய செயற்படாவிட்டால் முட்டைக்கு ஏற்பட்டுள்ள கதியே மின்சாரத்துக்கும் ஏற்படும். – என்றார்.

# அனுமதிப் பத்திரம் பெற்ற அரச நிதி மோசடியாளர்களே அரசியல்வாதிகள்!

## மிகிந்தலை விகாராதிபதி காட்டம்



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நாட்டில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது. பொதுத்தேர்தலை நடத்தினால் ஆரம்பக் கட்டமைப்பில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

ஊழல் மோசடியால் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. ஏனெனில் அரசியல்வாதிகள் அனுமதி பத்திரம் பெற்ற ஊழல்வாதிகள் என மிஹிந்தலை ரஜ மஹா விகாரையின் விகாராதிபதி தம்ம ரத்ன தேரர் தெரிவித்தார்.

மிகிந்தலை ரஜமஹா விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த அவதானம் செலுத்தப்பட்டுள்ளது, தேர்தலை நடத்திய உடன் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியுமா? சர்வதேச நாணய நிதியம் ஒத்துழைப்பு வழங்கி தேர்தலை நடத்தினால் ஊழல்வாதிகள் மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவார்கள்.

பிரதேச சபை, மாநகர சபை, மாகாண சபை, நாடாளுமன்றம் என அனைத்து அரச கட்டமைப்பு ஊழல் மோடியால் துறைபோயுள்ளது.

அரசியல்வாதிகள் அனுமதிப் பத்திரம் பெற்ற ஊழல்வாதிகளாக உள்ளார்கள். எவர் ஆட்சிக்கு வந்தாலும் மக்கள் வாழ்வதற்கான போராட்டத்தைத் தொடர வேண்டிய நிலை தற்போது காணப்படுகிறது.

பொதுத்தேர்தலை நடத்தினால் ஆரம்பக் கட்டமைப்பில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மக்கள் நிதியை மோசடி செய்ய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அடி மட்டத்தில் இருந்து ஊழல் மோசடி தீவிரமடைந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தை உள்ளூராட்சி மன்ற சபைகள் தோற்கடிக்கின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் நாடாளுமன்றத்துக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்களில் நிலவும் ஊழல் மோசடிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளோம். அரச நிதி கொள்ளையடிக்கப்பட்டதால் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. மோசடி செய்யப்பட்ட நிதியை அரசுடைமையாக்க வேண்டும். – என்றார்.

# சமூக பாதுகாப்பு அறவீட்டுவரி மீள் பரிசீலனை செய்யப்படும்!

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு



பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள 34 லட்சம் குடும்பங்கள் அரசாங்கத்திடம் நிவாரணத்தை கோரியுள்ளன.

வரி அறவிடல் ஊடாகவே நிவாரணம் வழங்க முடியும். சமூக பாதுகாப்பு அறவீட்டு வரி எதிர்வரும் ஓரிரு மாதங்களில் மீள்பரிசீலனை செய்யப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

வரி அறவிடல், பொருளாதார நிலைமை தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் கடந்த ஆறு மாத காலத்தில் முன்னெடுத்த கடுமையான தீர்மானங்கள் சாதகமான பெறுபேற்றை அளித்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை உடன் இம்மாத நடுப்பகுதியில் பேச்சில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளோம்.

கடுமையான தீர்மானங்களால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். கடுமையான தீர்மானங்களை எடுக்காமல் இருந்திருந்தால் நாட்டில் கடந்த வருடத்தில் ஏப்ரல், மே ஆகிய காலப்பகுதியில் இருந்த நிலை தற்போது பன்மடங்கு அதிகரித்து பாரிய விளைவை நாடு எதிர்கொண்டிருக்கும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள 43 லட்சம் குடும்பங்கள் அரசாங்கத்திடம் நிவாரண உதவியைக் கோரியுள்ளார்கள். இவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். வரி அறவிடல் ஊடாகவே நிவாரணம் வழங்க முடியும்.

பொருளாதார மட்டத்தில் உயர்நிலையில் உள்ள 10 சதவீதமானோரிடமிருந்து உதவிகளை பெற்று நடுத்தர அல்லது ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க புதிய வரிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அரச வருமானத்தை 14 சதவீதமாகத் தக்கவைத்துக் கொள்ள பெறுமதி சேர் வரி 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சமூக பாதுகாப்பு அறவீட்டு வரி இன்னும் ஓரிரு மாதங்களில் மீள்பரிசீலனை செய்யப்படும். சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி பெற்றுக் கொள்ளப்பட்டவுடன் ஒரு சில அத்தியாவசிய பொருள்களின் விலையை குறைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. – என்றார்.

# செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க ஏற்பாடு!




செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் வேலைத் திட்டம் இந்த வருடம் மார்ச் மாதத்தின் பின்னர் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கான இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் வழங்கும் முன்னோடித் திட்டம் கம்பஹா மாவட்டத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதாக அவர் செய்தியாளர் சந்திப்பு ஒன்றின்போது தெரிவித்துள்ளார். முன்னோடித் திட்டத்தின் கீழ் 75 பேருக்கு நடைமுறை பயிற்சிக்கான தற்காலிக ஓட்டுநர் உரிமம் (லேர்னர் பெர்மிட்) வழங்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

# சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட மருந்துகள்!

## தேசிய ஔடத ஒழுங்கமைப்பு அதிகார சபை கண்டுபிடிப்பு

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பெருந்தொகை மருந்து வகைகளை ஏனைய பிரதேசங்களுக்குப் பகிர்வதற்கு முற்பட்ட வேளையில் குறிப்பிட்ட குழுவினர் கைது செய்யப்பட்டனர் என தேசிய ஔடத ஒழுங்கமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த அதிகார சபையைச் சேர்ந்த அதிகாரிகள் புறக்கோட்டையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்த மருந்துத் தொகை கைப்பற்றப்பட்டது. இந்த மருந்துத் தொகையின் பெறுமதி ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமாகும். இந்தியா, துருக்கி, இத்தாலி உட்பட பல நாடுகளிலிருந்து இந்த மருந்து வகைகள் சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்டுள்ளன என்பது ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் தற்சமயம் விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என அதிகார சபையின் உணவு மற்றும் மருந்து பரிபாலன அதிகாரி அமித் பெரேரா தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பீரிஸின் கூற்று சரியா?

“உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போடும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்குக் கிடையாது. தேர்தலைப் பிற்போட வேண்டுமாயின் மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளது.

“உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதை தவிர மாற்று வழியேதும் அரசாங்கத்திற்கு இல்லை.” – என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருக்கின்றார்.

தான் சார்ந்த அரசியல் தரப்புக்கு ஏற்ப சட்டத்தையும் நீதியையும் தீர்ப்புகளின் அர்த்தங்களையும் வளைத்துப் பேசுவதில் சமர்த்தர் என்ற பெயர் பெற்றவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். அவரது இந்தக் கூற்றைக் கூட அந்தக் கோணத்தில்தான் நோக்க வேண்டி இருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தலை பிற்போட நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது என்று, சட்டத்தை உருவாக்கும் சட்டவாக்க மன்றைப் பார்த்து சட்ட வியாக்கியானம் கூறுகிறார் பீரிஸ்.

இந்த வாதம் எவ்வளவு தூரம் வலுவுடையது என்பது சர்ச்சைக்குரியதுதான்.

தேர்தலைப் பிற்போடுவதாயின் அதற்கு மக்களின் அனுமதியைப் பெற வேண்டும், அதற்காக ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டியிருக்கும் என்று பீரிஸ் குறிப்பிடுகின்றமை கவனிக்கப்பட வேண்டியதுதான்.

தேர்தல் வாக்களிப்பு தொடர்பாக அரசமைப்பில் உள்ள விடயங்கள் நோக்கற்பாலவை.

தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பு 1978 இல் நிறைவேற்றப்பட்ட போது, அதன் கீழ் மாகாண சபை ஆட்சி முறைமை இருக்கவில்லை. அது 1987 இல் தான் கொண்டுவரப்பட்டது.

அதற்கு முன்னரே நடைமுறைக்கு வந்து விட்ட தற்போதைய அரசமைப்பில் மக்கள் தமது இறைமையை வெளிப்படுத்தும் தேர்தல் வாக்களிப்புகளாக மூன்று குறிப்பிடப்பட்டுள்ளன. மக்கள் கருத்தை வெளிப்படுத்தும் சர்வஜன வாக்கெடுப்பு, ஜனாதிபதி தேர்தல் மற்றது பொதுத்தேர்தல். இவையே அந்த மூன்றும்.

எனினும் இந்த அரசமைப்பு கொண்டுவரப்பட்ட பின்னர், அதில் 13 ஆவது திருத்தம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை தேர்தலும் மக்கள் தமது இறைமையை வெளிப்படுத்தும் ஒன்றே என்று உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பு ஒன்றில் அடையாளப்படுத்தி, உறுதிப்படுத்தி உள்ளது.

இவற்றுக்குள் உள்ளூராட்சி தேர்தல் அடங்கவில்லை. அதாவது, உள்ளூராட்சித் தேர்தலை மக்கள் தமது இறைமையை வெளிப்படுத்தும் ஒன்றாக அரசமைப்பு குறிப்பிடவில்லை. உயர் நீதிமன்றமும் விதந்துரைக்கவில்லை.

மக்களின் இறைமையை வெளிப்படுத்தாத உள்ளூராட்சி மட்ட வாக்களிப்பு ஒன்றை, ஒத்திவைப்பதற்கு நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று உயர் நீதிமன்றம் கருதுமா என்பது கேள்விக்குறியே. உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெற வேண்டும் என்று உயர்நீதிமன்ற உத்தரவிடும் என நம்புவதற்கும் இடமில்லை.

# 180 தற்கொலைச் சம்பவங்கள் மட்டக்களப்பில் பதிவாகியுள்ளன!

### திடீர் மரண விசாரணை அதிகாரி நஸீர் தெரிவிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு சுமார் 180 இற்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்திருக்கின்றனர் எனத் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலைகளைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுகள் மாவட்டத்தின் எந்தவொரு கிராம மற்றும் நகர மட்டத்திலும் நடைபெறாமை தொடர்பாக உண்மையில் கவலையளிக்கிறது என மட்டக்களப்பு மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

வயது வித்தியாசமின்றி சிறியோர், பெரியோர், படித்தவர்கள், பாமரர்கள் என்று பல்வேறு மட்டங்களிலும் இன்று தற்கொலை கலாசாரங்கள் மேலோங்கியிருப்பது நமது மாவட்டத்துக்கு நல்லதொரு சகுணமல்ல என்றே தோன்றுகிறது.

ஒரு மனிதனுக்கு மனதில் ஏற்படும் விரக்தி, பயம், மனச்சோர்வு, கவலை எல்லாம் சேர்ந்து, அவனை அழுத்துவதால்தான் தற்கொலைக்கு தூண்டப்படுகிறான்.

தற்போது தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணங்களாக குடும்ப பிரச்சினை, காதல் பிரச்சினை, மன அழுத்தம், பரீட்சையில் தோல்வி, கணவன் – மனைவி முரண்பாடு, வறுமை, போதை மற்றும் பெற்றோரின் அறிவுரைகளை கவனத்தில் கொள்ளாமை என அடுக்கிக்கொண்டே போகலாம். சிறு சிறு காரணங்களுக்கு கூட மனமுடைந்து போய்விடுவதற்கான காரணங்களை கண்டறிய இயலாமல் தடுமாறுகிறோம்.

தற்கொலை என்ற ஒரு நிமிட எண்ணம் எல்லோருக்கும் உடனே வருவதில்லை. பிரச்சினைகளை எப்படிக் கையாள்வது என்று தெரியாமல் குழம்பும்போது அரவணைக்க, தோள் கொடுக்கவென யாரும் இல்லாமல், தனிமையில் வாடும் சந்தர்ப்பத்தில் இம்மாதிரியான முடிவை நோக்கி பலர் செல்கின்றனர்.

உங்களிடம் யாராவது வாழ்க்கை போற போக்கை பார்த்தால் பேசாம செத்திடலாம் போல இருக்கு’ என்று சொன்னால், அதன் பாரதூரம் அறியாமல் அவர்களைக் கடந்து செல்லாதீர்கள். இதுவும் தற்கொலை எண்ணத்தின் முதல் அறிகுறிதான்.

மனதில் ஏற்படும் விரக்தி, கோபம், இக்கால பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்க்கையை பற்றிய பயம் என்பவையே அவர்களை இப்படி பேச வைக்கிறது.

சரி, உங்கள் நெருங்கிய நண்பரோ அல்லது உறவினரோ, ஏன், உங்களுக்கு நெருக்கமான நபராக இருக்கலாம். இப்படி ஒரு முடிவெடுக்கப் போகிறார்கள் எனத் தெரிந்தால் என்ன செய்வீர்கள்?

கண்டிப்பாக தடுக்கத்தான் முயற்சி செய்வோம். அவர்களிடம் மனம் விட்டுப் பேசுவோம். ஆறுதல் சொல்வோம். மனதை மாற்ற முயற்சி செய்வோம். இப்படி செய்வதன் மூலம் தற்கொலையைத் தடுக்க முயற்சிப்போம். நாளுக்கு நாள் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் மக்கள் மத்தியில் அதிகரித்துக்கொண்டே செல்கிற நிலையில், அதைத் தடுக்கும் முயற்சியில் நாம் இறங்கவில்லையென்றால், மாவட்டத்தின் நிலைமை என்னாவது?

அரச, அரச சார்பற்ற உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளான நீங்கள், இது தொடர்பாக கலந்தாலோசித்து, தற்கொலை முயற்சியிலிருந்து மக்களைப் பாதுகாக்க வழிகோலுங்கள். – என்றார்.

# அதிபர் - ஆசிரியர்களின் ‘குருசெத’ கடனுக்கான வட்டிவீதம் அதிகரிப்பு!

### இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் ஜனாதிபதிக்கும் கடிதம்



அதிபர் – ஆசிரியர்கள் குருசெத கடனுக் கான கடன் மற்றும் வட்டி தவணைகளை செலுத்தும்போது 9.5 வீதமாக இருந்த வட்டியை 15.5 வீதம் வரை அதிகரிக்க எடுத்த தீர்மானத்துக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளதாக சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற எதிர்ப்பு நடவடிக்கையின்போது தெரிவித்துள்ளார்.

அதிபர்களும் ஆசிரியர்களும் பல பிரச்சனைகளை எதிர்கொண்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில், அரச வங்கிகள் மூலம் குருசெத்த கடன் திட்டத்தின் கீழ் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பெற்றுள்ள குருசெத்த கடனுக்கான வட்டியை அதிகரிக்க வங்கிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தில் அதிபர், ஆசிரியர்களுக்கு சம்பளம் அல்லது கொடுப்பனவுகள் எதுவும் அதிகரிக்கப்படவில்லை.

எனினும், அரசாங்க ஊழியர்களின் இந்த வருட வரவு – செலவுத் திட்டத்தின்படி, கடனுக்கானவட்டியைஉயர்த்துவதுபாரியஅநீதியாகும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க, ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், கடன் பெறும்போது அதிகூடிய அறவீடு செய்யக்கூடிய தொகைக்கே கடன் வழங்கப்படும். எனினும், தற்போது வட்டி அதிகரிப்பால் மாதாந்தம் அறவீடு செய்யப்படும் கடனுக்கான அறவீட்டுத் தொகை அதிகரிப்பால் கடனாளியின் மாதாந்தம் அறவீடு செய்யக்கூடிய தொகைக்கும் பார்க்க அதிகூடிய தொகை அறவீடு செய்யப்படுவதனால், சம்பளத்தில் அதிகபட்ச அறவீடு செய்யும் நிபந்தனையை மீறும் செயலாக இது காணப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், நிதி அமைச்சு, மத்திய வங்கி, அரசியல் அதிகாரங்கள் உடைய பொது நிதி முகாமைத்துவத்துக்கு பொறுப்பான நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளின் நிதி முறைகேடுகளால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை அரச ஊழியர்கள் மற்றும் மக்கள் தோள்களில் சுமத்திச் செல்லும் அரசாங்கத்தின் தன்னிச்சையான முடிவுகளை தொழிற்சங்கம் கடுமையாக எதிர்க்கிறது.

இந்த அரசாங்கம் அதிபர், ஆசிரியர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு பதிலாக, கஷ்டங்களை வழங்குவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# இலக்குநோக்கி பயணிக்கத் தவறும் அமைச்சுகளின் செயலாளர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுப்பு!

அரச நிர்வாக சேவையின் செயலாற்றுகையை முன்னெடுத்து செல்லும் நோக்கில் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கிடையில் இணக்கப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றை இந்த வருடம் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம் ஜனாதிபதி செயலாளரால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

செயலாளர் பதவி வகிக்கும் அமைச்சுக்களின் செயலாற்றுகையை அதிகரிப்பதற்காக இந்தவருடத்துக்கான ஓர் இலக்கு ஜனாதிபதி செயலாளரால் வழங்கப்படுவதுடன் அந்த இலக்கின் ஊடாக பயணிக்கின்றதா என 3 மாதங்களுக்கு ஒரு முறை அதன் முன்னேற்றத்தை ஆராய்ந்துப் பார்க்க இருக்கின்றது.

அவ்வாறு ஆராய்ந்து பார்க்கும்போது, இலக்கை போதுமான அளவில் பூரணப்படுத்தாத அமைச்சுக்களின் செயலாளர்கள் 6 மாதங்களில் கடமையில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க தீர்மானித்துள்ளார்.

60வயது பூரணமான அமைச்சுக்களின் செயலாளர்களை அதிகளவில் ஓய்வு பெற்றுச்செல்கின்றமையால் புதிதாக நியமிக்கப்படும் அமைச்சுக்களின் செயலாளர்களும் இந்த ஒப்பந்தத்துக்குள் உள்வாங்கப்படுவார்கள்.

மேலும் அரச சேவையின் செலவை 25 வீதத்தால் குறைத்தல், தேவையற்ற செலவுகளை இல்லாமலாக்குவது. அதேபோன்று சுற்று நிருபத்தின் பிரகாரம் செயற்படுதல் போன்ற அரச சேவையின் முன்னேற்றத்துக்குரிய பல இணக்கப்பாடுகளை உள்ளடக்கி இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது.

# மாகாண சபை நிதிப்பயன்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 03

மாகாண சபை நிர்வாக காலத்தில் திறைசேரியில் இருந்து பெறப்பட்ட நிதி தொடர்பான அறிக்கைகளை ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்துக்கும் சமர்ப்பிக்கவிருப்பதாக தேசிய கணக்காய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த சில வருடங்களில் திறைசேரி மூலம் பெறப்பட்ட நிதி மாகாண சபை நிர்வாகங்களால் எந்தவகையில் செலவு செய்யப்பட்டன என்பது பற்றிய கணக்காய்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை கடந்த இரண்டு வருடங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் தீர்மானிக்கப்பட்ட செயற்றிட்டங்களை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த செயற்றிட்டங்களைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளும் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அரசாங்கம் தெரிவித்துள்ளது.




## பால்சோறு இல்லாத 13 ஆவது வருடம்!

### சந்தியா எக்னலிகொட கூறுகிறார்



தங்கள் தலைக்கு மேலே ஈ கூட பறக்கமுடியாது என நினைத்துக்கொண்டிருந்தவர்களை இல்லாமல் செய்த ஆண்டு 2022 என காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா தனது முகநூல் பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

2023 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி எங்கள் வீட்டில் பால்சோறு இல்லாத 13 வருடங்கள். இந்த 13 வருடங்களில் 2022 ஆம் ஆண்டே மிகச்சிறந்த வருடம் என்பது மிகவும் கவலைக்குரிய விடயம்.

தங்கள் தலைக்கு மேலே ஈ கூட பறக்கமுடியாது என நினைத்தவர்களை – தங்களை மன்னர் என நினைத்துக்கொண்டிருந்தவர்களை துவம்சம் செய்த வருடம் இது.

இதன் காரணமாகவே நான் 2023 ஆம் ஆண்டு 2022 போன்று காணப்படவேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

## பணவீக்கத்தை மேலும் எம்மால் குறைக்கமுடியும்!

### மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை



பணவீக்கத்தை மேலும் குறைக்க முடியும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்

பௌத்தமகாநாயக்க தேரர்களுடனான சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக மகாநாயக்கர்களை சந்தித்த பின்னர் அவர் தெரிவித்துள்ளார்.

பணவீக்கத்தைக் குறைப்பது மத்திய வங்கியின் கடமை. மத்திய வங்கி அந்த விடயத்தில் சிறந்த முன்னேற்றத்தைக் காண்பித்துள்ளமை தொடர்பாகத் திருப்தியடைகின்றேன் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இது கடந்த வருடம் நாங்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார சுமைகளைக் குறைக்கும், வட்டி வீதம் குறையும் மக்களுக்கு நெருக்கடிகள் இன்றி சிறப்பான வாழ்க்கைக்கான வாய்ப்பு கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# புதிய வருடத்தில் அரசமைப்போம்!


லக்ஷமன் கிரியெல்ல சூளுரை

கொழும்பு, ஜன. 03

புதிய வருடத்தில் அரசாங்கத்தை அமைப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

புதிய வருடத்துக்கான பணிகளை ஆரம்பித்து கட்சி அலுவலகத்தில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின்பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார மற்றும் ஹர்ன ராஜகருணா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## போதைக்கு அடிமையான 742 பேர் யாழ். மாவட்டத்தில் அடையாளம்!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த ஆண்டுமாத்திரம்உயிர்கொல்லிப்போதைப் பொருளுக்கு அடிமையான 742 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது முன்னைய ஆண்டுகளை விட பலமடங்கு அதிகம் என்று மருத்துவத் துறை வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நடத்தப்பட்ட சிகிச்சைகளில் மாத்திரமே 742 பேர் அடையாளம் காணப் பட்டுள்ளனர். இவர்களில் 20 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்ட வயதுப் பிரிவினரே அதிகம்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர் களில் அதிகமானவர்கள் உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையானவர்கள். இவர்களில் உயிர்கொல்லி ஐஸ் மற்றும் கஞ்சாவுக்கு அடிமையானவர்களும் உள் ளனர்.

இவை மூன்றையும் பயன்படுத்துவர் களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு போதைப்பொருள் பாவனையா ளர்களாக அடையாளம் காணப்பட்டவர்க ளில் அதிகமானவர்கள் மூக்கு மூலமாக நுகர்கின்றனர். அதற்கு அடுத்தபடியாக ஊசி மூலம் அதனை நுகர்கின்றனர். உயிர் கொல்லிப் போதைப்பொருளுக்கு அடிமை யானவர்களுக்கு நுரையீரல் அழற்சி ஏற்பட்டு உயிரிழக்கின்றமையும் குறிப்பிடத் தக்கது.

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 15 பேர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 2023 உலகுக்குப் பெரும் சவால் ஐ.எம்.எவ். எச்சரிக்கை விடுப்பு!

கடந்த ஆண்டை விட 2023 ஆம் ஆண்டு முழு உலகுக்கும் மிகவும் கடின மான ஆண்டாக இருக்கும் என்று சர்வ தேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சீனாவின் மெதுவான வளர்ச் சியே இதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் போர் மற்றும் அதிக வட்டி வீதங்கள் காரணமாக உலகப் பொருளா தார வளர்ச்சி 2.7 சதவீதம் என்று கடந்த ஒக்ரோபர் மாதம் சர்வதேச நாணய நிதி யம் அறிவித்திருந்தது.

உலகின் இரண்டாவது பெரிய பொரு ளாதாரத்தைக் கொண்டுள்ள சீனா, தனது கொரோனா சுகாதாரக் கொள்கைகளைத் தளர்த்தியதையடுத்து, பாதிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை அதிகரித்துள் ளது. இதனால் 40 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்துள்ளது.

உக்ரைன் போரால் ஐரோப்பிய ஒன்றி யத்தின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கடுமை யான பொருளாதார மந்தநிலைக்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# புதிய பேராயராகும் வே.பத்மதயாளனுக்கு வாழ்த்தும் அவர் முன் உள்ள சவால்களும்!

- எஸ். இரத்தினஜீவன் ஹே. ஹூல் -
D.Sc. (Eng.) London, Ph.D. Carnegie Mellon,
IEEE Life Fellow, Chartered Engineer

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் ஆதீனத்துப் பேராயராக அதிவணக்கத்துக்குரிய அருட்பணி வே. பத்மதயாளன் அவர்களின் இன்று ஜனவரி 3, 2023 அன்றைய நிலைப்படுத்தலுக்கு என் நல்லாசிகள்.

சரித்திர பொருந்து நிகழ்வாக இலங்கையில் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் ஆதீனம், இலங்கைத் திருச்சபை என்று இரண்டு அங்லிக்கன் நல்லுறவுத் திருச்சபைகள் உண்டாயின. புதுப் பேராயர் இவையிரண்டின் பாரம்பரியம், அனுபவம், சவால்கள் என்பவற்றை அறிந்திருப்பது பொருத்தமானதும் அவசியமுமாகும்.

எனது புரட்டஸ்தாந்திய வேர்கள் 1825 இல் திருச்சபையைச் சேர்ந்து, விரைவில் தெல்லிப்பளை தேவாலய உதவி குருவாக வந்த எனது மூதாதையார் வைரவநாதர் சைரஸ் கிங்ஸ்பெரி உடன் தொடங்கும். அவரின் மகன் எட்வேட் அப்புக்குட்டி கிங்ஸ்பெரி யாழ்ப்பாணக் கல்லூரியில் கணிதத்தில் சுதேச பேராசிரியராயிருந்தார். CSI 1947இல் உருவானதும் அக்கிளை இந்தியாவில் இருந்த அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்ததோடு, என் தகப்பனார் பக்க இலங்கை திருச்சபையுடன் சகோதரச் சபை ஆகியது. நான் ஆகவே CSI ஐப் பற்றி மிகப் பெருமைப் படுகிறேன்.

அமெரிக்கன் கொங்ரிகேனலிஸாரின் (Congregationalist ABCFM) கல்வித்தள மிஷனரிமார் அமெரிக்கன் ஐவி லீக் (Ivy League) மேலும், தாராளவாத கலைகளுக்குரிய (Liberal Arts) கல்லூரிகளோடு சம்பந்தமான வலுவான கற்கை மரபையும் கொண்டு வந்தனர். அவர்களது சமர்ப்பணத்தை 1960 இல் தேசியமயமாக்கப்பட்ட எட்டு நடுநிலை மேலும், அறுபது தொடக்கநிலை CSI பாடசாலைகள் காட்டும்.


எழுத்தாளர் இரத்தினஜீவன் ஹூல்

இந்த பலமான பாரம்பரியமானது கொங்ரிகேனர் பட்டதாரிகளை அங்லிக்கன் (அருட்பணி T.P. ஹன்டி போன்றோர்) குருமார்களாக உள்வாங்கியதாலும், மற்றும் திருமணங்களாலும் உட்பரவியது. இன்று இப் பாரம்பரியத்துக்கு கிறிஸ்தவர்களது, மாணவர்களினதும் ஆசிரியர்களினதும், எண்ணிக்கை வீழ்ச்சிகள் பெரும் சவால்களாயுள்ளன.


அபிஷேகிக்கப்பட்ட பின் பேராயர் வேலுப்பிள்ளை பத்தமதயாளன்

சவாலுக்குள் தள்ளப்பட்டுள்ள இரண்டாம் பாரம்பரியமானது உண்மைக்கான அர்ப்பணிப்பாகும். ஒரு இந்து செய்தியாளர் எனக்கு சொன்னதுபோல், 'பாதிரிமார் பொய் சொல்லமாட்டார்கள் என்றிருந்தது, ஆனால் இன்று அப்படியல்ல' எனலாம்.உதாரணமாக இலங்கை திருச்சபையின் சி.எம்.எஸ். (CMS) நிறுவிய பரி. யோவான் கல்லூரி 1851 இல் நிறுவப்பட்டதென்று ஆதாரங்கள் காட்டுகின்றன. உதாரணமாக, CMS அச்சிட்ட, CMS குருவான J.W.போல்டிங் எழுதிய, 'CMS இலங்கையில் – 1818 – 1918' என்ற CMS நூற்றாண்டு நினைவு மலர் 1851 ஐயே பரி. யோவான் கல்லூரியின் ஸ்தாபக வருடமாக தருகிறது. மேலும் 1841 இல் ஸ்தாபிக்கப்பட்ட சுண்டுக்குளி மிஷனரி என்பது மூடப்பட்டதென்றும் அதுவரை 200 இற்கு மேற்பட்ட மாணவர்கள் அங்கு கற்று இதில் 70 பேர் கிறிஸ்தவர் ஆகினர் என்றும் CMS நூற்றாண்டு மலர் கூறுகிறது. அந்த நிறுவனத்தின் பெயர், அதாவது சுண்டுக்குளி மிஷனரி, சுண்டுக்குளிக்கு வந்த அதன் ஐம்பதாவது (ஜுபிலீ) கொண்டாட்டத்தின் போதே பரி. யோவான் கல்லூரி என இடப்பட்டது. ஆகவே கல்லூரியின் ஆரம்பம் 1823 ஆக இருந்திருக்க முடியவே முடியாது.

ஆனால் மிஷனரிகள் சென்றபின், யாழ் சென்றல் கல்லூரியை விடப்பழமையானது என்று காட்டும்படி தமிழ் நிர்வாகிகள் பரி.யோவான் கல்லூரி நிறுவப்பட்டது.1823 இல் என்று அமைக்கப்பட்ட முன்னைய பாலர் பாடசாலையின் தொடக்க திகதியை எழுதுகிறார்கள். அதனால் வரும் மார்ச் மாதம் 2023 இல் பேராயர் துஷ்ந்த ரொட்ரிகோ அவர்கள், உண்மையை அறிந்தும் கல்லூரி 200 ஆம் வருடமென்னும் கல்வாசகத்துக்குத் திரை நீக்குவார். 'அறிந்தும்' என்று நான் கூறுவதற்கு காரணம் CMS நூற்றாண்டு மலர் திருச்சபை வாசிகசாலையிலேயே உள்ளது மட்டுமின்றி, இச்சரித்திரத்தை அவர் முன்பாகவும் 300 இற்கு மேற்பட்ட மறைமாவட்ட சபை முன்பாகவும் 2 – 3 தடவைகள் என்றாலும் நான் கூறியுள்ளேன். எனினும், கொண்டாட்டத்தை அவர் நிறுத்த விரும்பவில்லை போலும்! மார்ச் மாதம் 2023 இல் அத்தியட்சகரே பொய்யை சீமெந்தில் பொதிப்பாரோ?

ஒரு பின் குறிப்பு என்னவெனில் மெதடிஸ்த திருச்சபை ஸ்தாபித்த யாழ் சென்றல் கல்லூரி தமக்கும் பொய்சொல்லத் தெரியும் என்று தனது ஸ்தாபக வடருத்தை 1834 இலிருந்து 1814 இற்கு மாற்றியுள்து. என்னிடம் ஸ்தாபகர் பீட்ட பேசி வல் 1834 இல் திருச்சபை மலரொன்றில் எழுதிய கடிதம் உள்ளது. அதில் தான் ஒக்ரோபரில் ஆங்கிலப் பள்ளிக்கூடம் ஒன்றை தொடங்கப் போகிறார் என விளம்பரப்படுததி 150இற்கு மேற்பட்ட மாணவர் சேர்ந்தனர் என்று குறிப் பிட்டுள்ளார்.

மேலும் 1934 இல் கல்லூரி நூற்றாண்டுக் கொண்டாட்டத்திற்கு அச்சிட்ட 1 அங்குள தடிப்பான புத்தகமும் என்னிடம் உள்ளது. அங்கிலிக்கன் திருச்சபை வழிகாட்டியது போல், அவர்களும் 1814 இல் இருந்த பள்ளிக்கூடத்தை வைத்து அதுவே சென்றல் கல்லூரியின் முதல் தோற்றம் என்று திருச்சபை தலைவர் ஜெபநேசன், நீதிவான் கதிரவேலுப்பிள்ளை, பேராசிரியர் சிற்றம்பலம் ஆகியோரை வைத்து அறிக்கை ஒன்றை விடுவித்து, ஜனாதிபதி சிறிசேனாவூடாக இரு நூற்றாண்டு முத்திரையையும் வெளியிட்டனர். இதனால் சென்றல் கல்லூரி மீண்டும் மிகப் பழமை நிலையை கைப்பற்றியுள்ளது.

இதே போலவே 1872 இல் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டதென்று அதிபர் சிட்னி பங்கர் எழுதியது இருக்க, யாழ் கல்லூரியின் ஸ்தாபக வடரும் 1823 ஆகியுள்ளது. அது இன்னும் ஒரு பெரிய கதையாகும்.

இந்த நேர்மையின்மைக்கான புகழிலிருந்தே கிறிஸ்தவ சமூகம் விடுவிக்கப்படவேண்டும்.

மூன்றாவது சவால் ஜனநாயகத்தைப் பேணலாகும். இதன் ஒரு பகுதி, தவறுகளை தட்டி கேட்பதும் அதற்கு வேண்டிய துணிச்சலும். ஓர் உதாரணமாக, திருச்சபையின் நன்கொடை நிதி ஒன்றிலிருந்து, இளைப்பாறிய பேராயர் இருவர் ஆளொருவருக்கு ரூபாய் 50 லட்சத்திற்குக் கார் ஒன்றும், ஆச்டீக்கன்மார் நால்வர் ஆளொருவருக்கு ரூபாய் 100 லட்சத்திற்கு கார் ஒன்றும் வாங்கியதாகக் காணப்பட்டது. ஆனால் யாப்பில் கட்டாயமாக வேண்டப்பட்ட மறைமாவட்ட சபை அங்கீகாரம் பெறப்படவில்லை. இது சுட்டிக்காட்டப்பட்டபோது ஒரு குருவானவர் ஆகிலும் அதிர்ச்சி காட்டவும் இல்லை, கேள்வி எழுப்பவும் இல்லை. ஏன்? பேராயர் கோபமுற்று காட்டுப்பகுதிகளுக் இடமாற்றம் செய்துவிடுவார் அல்லது பிள்ளைகளுக்கு வேண்டிய பள்ளிக்கூடங்கள் கிடைக்காமல் போய்விடலாம் என்ற பயமே. ஒரு நல்ல பேராயர் இப்படிப்பட்ட பயங்களைத் தான் நீதிமான் என்று தனது நடத்தையில் முன்னுதாரணம் காட்டி நீக்கவேண்டும்.

தாங்கள் ஜனநாயகத்தைப் பேணில் அத்துடன் மற்ற இரண்டு சவால்களும் ஒருங்கே தீரவழியுண்டு போய்விடும்.

உங்களைத் தேவன் ஆசீர்வதிப்பாராக.

காலைக்கதிர்
Kalaikkathir

# உலகின் மிக முக்கியமான கால கட்டத்தில் இந்தியா ஜி 20 அமைப்பின் தலைமைப் பதவியை ஏற்கின்றது

## இது மிகப் பெரிய விடயம் என்கிறார் ஜெய்சங்கர்




ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் புலம் பெயர் இந்தியர் மத்தியில் உரையாற்றும் ஜெய்சங்கர்...

ஜி 20 நாடுகள் அமைப்பின் தலைமைப் பதவியை இந்தியா பெற்றிருப்பது மிகப் பெரிய விடயம் என்று கூறியுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் மற்றும் உலகில் வலுவான அரசியல் துருவமுனைப்பு ஆகியவற்றிற்கு மத்தியில், பெரும் பொருளாதார நெருக்கடி இருக்கும் நேரத்தில், சக்திவாய்ந்த குழுவின் கூட்டங்களை நடத்துவதற்கான பொறுப்பை தமது நாடு ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கூறினார்.

டிசம்பர் முதலாம் திகதி ஜி20 தலைமைப் பதவியை இந்தியா முறையாக ஏற்றுக்கொண்டது. அடுத்த ஜி20 தலைவர்கள் உச்சிமாநாடு நாடுகளின் அரசுத் தலைவர்கள் மட்டத்தில் செப்ரெம்பர் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் புதுடெல்லியில் நடைபெற உள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரிய தலைநகரில் புலம்பெயர்ந்த இந்திய உறுப்பினர்களிடையே உரையாற்றிய ஜெய்சங்கர், இந்தியா தனது தலைமைப் பதவியை சர்வதேச சமூகத்தின் நலனுக்காகப் பயன்படுத்த விரும்புகிறது என்றார்.

எனக்கு சில சமயங்களில் கேள்வி எழுகிறது, நீங்கள் எந்தப் பகுதியிலிருந்து, எப்படியும் உங்கள் வழியில் வர வேண்டும் என்று நீங்கள் கற்பனை செய்யலாம். எனவே, இது என்ன பெரிய விடயம்? இது மிகப் பெரிய விடயம். ஏனென்றால், நமது இராஜதந்திர வரலாற்றில், இவ்வளவு சக்திவாய்ந்த நாடுகள், உலகின் தலைசிறந்த 20 பொருளாதாரங்கள், இன்று உலகின் மொத்த உள்


வியன்னாவில் ஞாயிற்றுக்கிழமை பல்கேரியா அதிபர் ருமென் ஜார்ஜீவ் ராதேவை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்த போது.....

ளூர் உற்பத்தியின் பெரும்பகுதியை உலக வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஓர் அமைப்புக்கு இந்தியா தலைமை தாங்குகிறது. அதனால், அவற்றின் தலைவர்கள் இந்



தியாவுக்கு வருகிறார்கள் என்று அவர் கூறினார்.

யார் வருகிறார்கள் என்பதை விட, அவர்கள் எப்போது வருகிறார்கள்? ஏனென்றால் அது கடினமான நேரம். விநியோகச் சங்கிலிகளில் உலகம் பெரும் பொருளாதார அழுத்தத்தில் உள்ளது. மிகவும் வலுவான அரசியல் துருவமுனைப்பு உள்ளது. அனைத்து முக்கிய நாடுகளையும் மேசையைச் சுற்றி உட்கார வைப்பதற்கு கூட நிறைய தேவைப்படுகிறது. எனவே, இந்த நேரத்தில் இந்த பொறுப்பை நாங்கள் எடுப்பது உண்மையிலேயே விதிவிலக்கான ஒன்று – என்று அவர் கூறினார்.

தனது இரு நாட்டு சுற்றுப்பயணத்தின் இரண்டாம் கட்டமாக சைப்ரஸில் இருந்து ஆஸ்திரியா வந்தடைந்த ஜெய்சங்கர், இந்தியா நியாயம் மற்றும் நீதியின் குரலாக இருக்கும் என்றார்.

சமூகங்கள் மற்றும் நாடுகளுக்காகக் குரல் கொடுப்பதை நாடு உறுதி செய்யும் என்றும் அவர் கூறினார்.

**(நன்றி: ‘த ட்ரிபியூன்’)**

# அறிவியல், தொழில்நுட்பம், நவீன கண்டுபிடிப்புகள் இந்தியாவின் புதிய தோற்றத்தை மிளிர வைக்கும்!

## அறிவியல் தொழில்நுட்ப அமைச்சர் ஜிதேந்திர சிங் பெருமிதம்

2023 ஆம் ஆண்டில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள் 2047 ஆம் ஆண்டில் இந்தியாவின் படத்தை வரையறுக்கும் என்று இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ஜிதேந்திர சிங் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், ‘2023 அறிவியல் பார்வை’யில் பேசும்போது, 2023 முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் 2023 இந்தியாவின் வடிவத்தை 2047 இல் கோடிட்டுக் காட்டும். 2047 இன் இந்தியாவின் படம் 2023 இல் தீர்மானிக்கப்படும். இந்த படம் கடந்த எட்டு ஆண்டுகளின் அவுட்லைனாக இருக்கும்.” – என்றார்.

உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுதற்போது பலன்களை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் நாட்டிற்கு புதிய பரிமாணத்தை வழங்குவதற்காக பிரதமர் நரேந்திர மோடியின் முயற்சிகளை அவர் பாராட்டினார்.


2047க்கு முந்தைய 25 வருடங்கள் 2023 இல் தொடங்குகின்றது. இந்தியா சுதந்திரத்தின் நூறாவது ஆண்டு விழாவை 2047 இல் கொண்டாடும். எனவே கடைசி கால் நூற்றாண்டில் 2023 ஆம் ஆண்டு முதல் ஆண்டாக இருக்கும். 2047 இல் இந்தியா தனது கனவுகள் அனைத்தையும் காண முடியும். நூற்றாண்டு உண்மையாகிறது. இதற்குக் காரணம் இந்தியாவின் பொரு




ளாதாரம், நமது கண்டுபிடிப்புகள் மற்றும் நமது அறிவியல் சாதனைகளை கணிசமான அளவில் சார்ந்துள்ளமை. – என்றார்.

கடந்த எட்டு ஆண்டுகளில் அறிவியலுக்கு அவர் அளித்த மரியாதை, விஞ்ஞானிகளுக்கு மரியாதைக்குரிய பதவிகளை அளித்து அவர்களை நடத்திய விதம் மற்றும் அறிவியல் பணிகளை எளிதாக்குவதற்கு பல விதிகளை எளிமைப்படுத்திய விதம் ஆகியவற்றிற்காக பிரதமர் மோடியை அமைச்சர் மேலும் பாராட்டினார்.

அதற்கு உதாரணம் கூறிய அமைச்சர், தனியார்



பொதுப் பங்கேற்புக்கு இடம் திறக்கப்பட்டுள்ளது, அதன் விளைவாக, தனியார் ரொக்கெட்டுகள் ஏவப்படுகின்றன. இந்த ஆண்டு முடிவடையும் போது, நாடு உற்சாகத்தில் மூழ்கும் என்றார்.

‘ககன்யான்’ நமக்கு பெருமைக்குரிய விடயமாக இருக்கும். அதன் வகைகளில் அது முதன்மையானது. ககன்யான் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அழைத்துச் செல்லும் முதல் மனித விமானமாகும். இதன் விளைவாக நமது சுயமரியாதை அதிகரிக்கும், என்று அவர் மேலும் கூறினார்

அமெரிக்கா அல்லது ரஷ்யாவுடன் ஒப்பிடும்போது நமது விண்வெளிப் பயணம் தாமதமாகத் தொடங்கினாலும், இன்று அமெரிக்கா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளுக்கு நமது ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளை வழங்கும் நிலையில் நாம் இருக்கிறோம். இவை இந்த நாடுகளின் ஆராய்ச்சியை மேலும் மேம்படுத்த உதவுகின்றன என்று அவர் கூறினார்.

அறிவியல் துறையில் சாதனை பற்றி பேசிய அவர், பிரதமர் மோடியின் தலைமையில் இந்தியா தன்னை நிரூபிக்க கொவிட் ஒரு வாய்ப்பை வழங்கியது என்றும் குறிப்பிட்டார்.

மோடிஜியின் தலைமையில், விஞ்ஞானிகளுக்கு பிரதமர் அளித்த மரியாதை காரணமாக அவர்களின் சுயமரியாதை அதிகரித்தது. மோடிஜி விஞ்ஞானிகளுக்கும் அறிவியல் பணிகளுக்கும் சம அளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்று அவர் கூறினார்.

பிரதமரால் பல புரட்சிகரமான முடிவுகள் எடுக்கப்பட்டன, உதாரணமாக, பொது – தனியார் பணிகளுக்கு இடம் திறக்கப்பட்டது. இதன் விளைவாக தனியார் ரொக்கெட்டுகள் ஏவப்படுகின்றன என்று அவர் மேலும் கூறினார்.

கடந்த எட்டு ஆண்டுகளில் அறிவியல், அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கு அடித்தளம் அமைத்ததற்காக பிரதமர் மோடியைப் பாராட்டிய அவர், நாட்டின் செங்கோட்டையில் இருந்து மோடிஜியால் தொடங்கப்பட்ட ஸ்டார்ட்அப் இந்தியாவுக்கு முன்பு, இன்று 300 ‘ஸ்டார்ட்அப்கள்’ மட்டுமே இருந்தன. அவர்களின் எண்ணிக்கை இன்று 80,000 க்கும் அதிகமாக




அதிகரித்துள்ளது.”

முன்னர் ஆக 50 பயோடெக் ‘ஸ்டார்ட்அப்கள்’ மட்டுமே இருந்தன, ஆனால் இன்று அது 5,500 ஆக அதிகரித்துள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

“கடந்த ஏழு முதல் எட்டு ஆண்டுகளில், பிரதமர் மோடி புதுமையின் முக்கியத்துவத்தை விளக்கினார், அதை ஊக்குவித்தார், மேலும் சிறப்பாக செயல்படுவதற்கான விதிகள் மற்றும் சட்டங்களை திருத்தினார்.

வரும் காலங்களில் இந்தியப் பொருளாதாரத்தில் அறிவியலும் புதுமையும் முக்கியப் பங்காற்றப் போகின்றன என்பதை உணர்ந்த மோடி, ரயில்வே, ஸ்மார்ட் சிட்டி, சாலைகள், பாலங்கள் என எல்லாத் துறைகளிலும் இதைப் பயன்படுத்தினார். மோடி அடிக்கல் நாட்டினார். கடந்த எட்டரை ஆண்டுகளில் அதன் முடிவுகள் வெளிப்படத் தொடங்கியுள்ளன என்று அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் மேலும் கூறினார்.

**(மூலம்: ஏ.என்.ஐ.)**

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 230

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!


## அசிங்கமான அமெரிக்கன் வழியில் இந்தியன்

இந்தியாவால் ஜே.ஆரின் முஸ்டியை உடைத்து, தமிழ் மக்களுக்கு தர வேண்டியதை பெற்றுக் கொடுத்திருக்க முடியாதா என்ற கிணற்றடி பேச்சுக்கள் உண்டு. பாகிஸ்தானை மிரட்டி பங்களா தேஷை உருவாக்கவில்லையா? எங்களை, எங்கள் பாட்டில் விட்டால், அதனை நாங்களே பார்ப்போம் என்ற மேதாவிப் பேச்சுக்களும் இல்லாமல் இல்லை.


இந்திரா காந்தியின் மறைவுக்குப் பின், தனக்கிருந்த சனி பகவான் நீங்கியதாக நினைத்து, வாலைக் காட்டிய ஜே. ஆரை, நாட்டின் இறமையை மீறி, வானத்தில் பறந்து, உணவுப் பொட்டலங்களை வீசி, நிலைமைகள் கட்டுமீறிப் போகலாம் எனத் தரப்பட்ட பயமுறுத்தல்களாலேயே ஜே.ஆர் இறங்கி வந்து, இணக்கம் ஒன்றுக்குச் சம்மதித்தார்.

அப்படியில்லாவிடில் ஸ்ரீலங்காவின் ஆக்கிரமிப்புக்கான போர் ஒன்றைத் தொடங்கி, அதனோடு மல்லுக்கட்டி, அதன் மூலம் எழும் விளைவுகளில் இருந்துதான் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிருக்க வேண்டும். அது தனி நாடு என்று ஒன்று அமைப்பதாக இருக்காது. ஆகக் கூடிய அளவில் தமிழ்நாட்டோடு இணைக்கப்பட்ட ஆட்சியாகலாம். அன்றில், அது போன்ற சுயாட்சி இந்திய மத்திய அரசுக்கு கட்டுப்பட்டதாக ஏற்படுத்தியிருக்கலாம்.

வாழ்க்கையின் நீதிகளையோ, நியதிகளையோ, மீறியதல்ல ஒரு நாட்டின் அரசியல். டொமினியன் காலத்திலிருந்தே



நாடு முழுவதும் தங்களது ஆக வேண்டும், சிறுபான்மையினரை – முதலில் தமிழ் மக்களை – ஒதுக்கி அவர்கள் வேறு வழியில்லாமல், ஒரு நாடு, ஒரு சட்டம், ஒரு நாட்டின் மக்கள் என்று வருவதற்கான திட்டமிட்ட கட்டமைப்புகளை முன்னெடுத்தவர்கள் சிங்களத் தலைவர்கள். அதன் முக்கிய அங்கமாக பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா, வளங்கள் நிறைந்த வடகிழக்கின் தரிசு நிலங்களை குறிவைத்து, சிங்கள மக்களை அவற்றில் குடியேற்றி, தமிழர் தேசத்தில் இன விகிதாசாரத்தை நீர்த்



துப் போக வழி சமைத்தவர். பிரதமர் நேருவின் காலத்தில் இருந்தே தமிழ் தலைவர், ஆதரவுக்காக இவற்றை தமிழ்நாட்டின் தலைவர்கள் மூலமாக சமர்ப்பணங்கள் செய்யாமல் இல்லை. ஆனால் பிராந்திய அரசுகளின் கோட்பாடுகள், இவை இறைமையுள்ள ஒரு நாட்டின் உள்நாட்டு செயற்பாடுகள் என இந்தியா கைகளை கட்டி இருந்தது.

சீக்கியர் கோரிய காலிஸ்தான் தனிநாட்டுப் பிரிவினையை, இரும்பு கரங்கள் கொண்டு இந்திரா, அவர்களை புனித ஸ்தலமான தங்க கோவிலிலேயே கிளர்ச்சித்து தலைவர்களைச் சாகடித்தது, இந்திராவின் உயிரையும் பறித்தது. அது இந்தியாவுக்குப் பிராந்தியத்திலிருந்த ஆளுமையையும் பாதித்தது.

ராஜீவ் காந்தி பிரதமராக பதவியேற்ற முதல் வருடத்திலேயே பல உள்நாட்டுப் பிரிவினை கோரிக்கைகளைக் கையாள வேண்டி வந்தது. அவற்றை தனது தாயார் போல் மோதலால் தீர்வுகள் நாடாது, இணக்கத்தில் அடைய முயற்சிகள் மேற்கொண்டு இருந்தார் ராஜீவ். இந்தப் பதிவில் ராஜீவ் எதிர் நோக்கிய பிரிவினை வாதங்களை முழுமையாக விவரிப்பது, அதன் தன்மைகளை விளக்குவதோ கஷ்டம். வங்காளத்தில் நேபாள மொழி பேசி, டார்ஜிலிங் மலைத்தொடரில் வசித்த மக்கள் தனி நாடு கோரினார்கள். சுபாஷ் கிஸ்ஸிங் என்ற முன்னைய இராணுவ தளபதியின் கீழ் 'குர்க்கா தேசிய விடுதலை முன்னணி' என்ற பெயரில் இயங்கிய விடுதலை வீரர்கள் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டமையைத் தொடர்ந்து ராஜீவ் காந்தி சுபாஷ் கிஸ்ஸிங் உடன் சந்திப்புகள் ஏற்படுத்தி, தனிநாட்டுக்குப் பதிலாக, அந்தப் பகுதிக்கு சுயேச்சையாக அதிகாரப்பார்வை ஏற்படுத்தினார்.

அசாமின் எல்லைப் பிரதேசத்தில் போடோ ஆதிவாசிகள் கிளர்சிகளில் 'ஒன்றிணைந்த போடோ மாணவர் சங்கத்தின்' பெயரில் ஈடுபட்டு அவர்களது அசாம் பிரதேசத்தில் இருந்து தனிநாட்டுக்கு போரிட, அவர்களுக்கு எதிராக அசாம் தீவிரவாதிகள் எதிர்த்தாக்குதல் நடத்த, வன்முறைகள் பெருமளவில் வளர்ந்தன.

பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின் வங்காளத்துக்கு குடி பெயர்ந்த கிழக்குப் பாகிஸ்தானின் வங்காளம் பேசும் மக்கள் திரிபுராவில் 'திரிபுர தேசிய தொண்டர்கள்' என்ற அமைப்பில் தனித்துவத்துக்கு பயங்கரமான வன்முறைகளில் இறங்கினர். இது ஓரளவில் தமிழ்நாட்டுக்கு ஏதிலிகளாகச் சென்ற ஈழத் தமிழர்களது நிலையை ஒட்டியது. திரிபுர தேசிய தொண்டர்களின் தலைவர் பிஜோய் ஸ்ரீரங்காவால், பின்னர் ராஜீவுடன் ஏற்பாட்டில் இணக்கச் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

பஞ்சாபில் ராஜீவ் காந்தி லோங்கோவாலுடன் (பஞ்சாப் கிளர்ச்சிக்காரர்களின் தலைவர்) இணக்கங்களை ஏற்படுத்தினார். ஆயினும் வன்முறைகள் அந்த மா நிலத்தில் தொடர்ந்து கொண்டிருந்தன அது ஜம்மு – காஷ்மீர் பகுதியையும் பாதித்தது.

தென்னாட்டில் திராவிட இயக்கங்கள்



பலமான தனித்துவத்தை பல வடிவங்களில் தெரிவித்து கொண்டு இருந்தன.

தெலுங்கு தேசத்துக்கான கோரிக்கைகளைக் கையாள வேண்டியிருந்தது

ஜே.ஆர். பிராந்திய வட்டத்திலிருந்து விலகி, அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் ஸ்ரீலங்காவை கொண்டு போகிறார் எனக் கணித்து, தமிழ் விடுதலை குழுக்களுக்கு சில ஆதரவுகளை தந்தாலும், தமிழ்நாட்டு அரசாங்கமும், அங்கிருந்த திராவிட அரசியல் கட்சிகளும், இனரீதியாக பலத்த ஆதரவுகள் தந்தவை. தென் பகுதிகளில் பல தனித்துவ கோரிக்கைகளுக்கு இது ஆதாரமாக வெளிப்படும் என்ற வண்ணப்பாங்கு மேலெழுந்து, சுயாட்சி அமைப்பை இணக்க அடிப்படையிலேயே ராஜீவ் நாடி ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தினார். ஆனால் இந்தியா தான் பிராந்தியத்தின் வல்லரசு என்பதை எந்தத் தருணத்திலும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை, முனகிய அந்தப் பிராந்தியத்தின் சில அரசுகள் அதனை 'அமெரிக்கா போன்று அசிங்கமான இந்தியன்' என அழைத்தாலும் பரவாயில்லை என்ற மனோபாவத்தையும் இந்தியாவுக்கு வளர்த்தது.

பிராந்தியத்தின் நியதிகளும் யதார்த்தங்களும் அரசியலும் இவ்வாறு இருந்த பொழுது தமிழ் மக்களது அணுகுமுறை தெளிவாகவே இருந்தது. விரும்பியோ விரும்பாமலோ உலகறிய ஒப்பந்தம் வந்தபோது அனுசரிப்பும் கூட இருந்திருக்க வேண்டும். தகராறு இல்லாத குடும்பம் இல்லை. ஆனால் எது குடும்பம் என்ற புரிதலும் இல்லாமல் போனது காலத்தின் கோலம்.

### தலையணை மந்திரம்

தமிழ் தாய்மார்கள் மட்டுமல்ல, உலக அடங்கிலும் திருமணமாகிப் புகுந்த வீடு செல்லும் அல்லது தனிக்குடித்தனம் தொடங்கப் போகும் மகளுக்கு, எப்படி புருஷனைக் கையாளுவது, மாமனார், மாமியார், மற்ற குடும்ப உறவுகள் இருக்கும் நேரத்தில் கணவனை கண்டிக்காமல் அல்லது அவனுக்கு ஓதாமல், படுக்கையறையில் தலையணையில் படுத்திருக்கும் போது பட்டும் படாமலும் சொல்லி வைப்பது, உள்ளொன்று வைத்துப் பேசினாலும், மாமியாருக்கு அனுசரணையாக நடந்து, வீட்டின் நிர்வாகத்தையும் சாவிக் கொத்தையும் கைப்பற்றுவதிலேயே குறிப்பாக இருக்க வேண்டும் என்ற புத்தி மதிகள் தருவார்கள். அப்படியான நிகழ்ச்சி நிரலில் நடவாமல், புகுந்த வீடு சென்ற உடனேயே தனது அதிகார வட்டங்களை நிலை நிறுத்துவதற்காக எகிறிக் குதித்து, ஆர்ப்பாட்டங்கள் செய்தால், கணவன் ஒத்து வந்தால் தனிக்குடித்தனம் வைக்கலாம். அப்படி அவனும் ஒத்து வராவிட்டால் பெற்ற வீடுதான் அணைக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டாலும், அணைப்புகள் இருந்தாலும், மகள் வாழ்க்கையைத் தொலைத்த கதைதான்.

தமிழ் மக்களின் நோக்கம் குடியேற்றங்களால் பாரம்பரிய பிரதேசங்களுக்கு ஏற்பட்ட தாக்கங்களையும், ஜே.ஆர். தமிழ் மக்களைத் தனது திட்டங்களின் வசதிகளுக்காக வடக்கு, கிழக்கு, தமிழர், முஸ்லிம் என கூறு போட்டு, அரசியல் நடத்த முனைந்ததை அறிந்திருந்தும், அவை தடுக்கப்பட வேண்டும் என்ற நடைமுறைகளில் முன்னேறி இருக்க வேண்டும். தொடர்ந்த பேரினவாதத்தின் நம்பிக்கைகள் அற்ற வாக்குறுதிகளை நம்பி, தமிழ் மக்கள் தங்களது பிரதேசங்களை சோரம் போக விட்டதுதான் நடந்தது.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

## எரிபொருள்களின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலையை 10 ரூபாவினால் குறைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 405 ரூபாவாகவும் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் புதிய விலை 355 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்தின் விலை குறைப்பிற்கு அமைய லங்கா ஐஓசி நிறுவனமும் தமது ஒட்டோ டீசலின் விலையை 15 ரூபாவால் குறைக்க தீர்மானித்துள்ளது.

## குமார் நடேசனுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரவாசி பாரதிய சம்மான் விருது (பி.பி.எஸ்.ஏ) என்பது வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு வழங்கப்படும் உயரிய கௌரவமாகும். வெளிநாடு வாழ் இந்தியர்கள், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் அல்லது வெளிநாடு வாழ் இந்தியர்கள் அல்லது இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டு நடத்தப்படும் அமைப்பு/நிறுவனம் ஆகியவற்றுக்கான பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டின் ஒரு பகுதியாக, இந்திய குடியரசுத் தலைவரால் பிரவாசி பாரதிய சம்மான் விருது வழங் கப்படுகிறது.

பிரவாசி பாரதிய திவாஸ் (PBD) மாநாட்டின் 17 ஆவது விருது வழங்கல் 2023 ஜனவரி 8 – 10 வரை மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் நடைபெறவ்ள்ளது. பிரவாசி பாரதிய திவாஸ் கொண்டாட்டங்களின் பாராட்டு அமர்வில், இந்திய குடியரசுத் தலைவரால் பிரவாசி பாரதிய சம்மன் விருதுகள் வழங்கப்படும்.

உலகடங்களிலும் 27 பேர் இந்த விருதுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

## விளையாட்டுத் துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த பெப்ரவரி, 2020 இல் இருந்து யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அரசாங்க அதிபராக கணபதிப்பிள்ளை மகேசன் கடமையாற்றியிருந்தார் .

மட்டக்களப்பு வாழைச்சேனை, வவுணதீவு மற்றும் செங்கலடி ஆகிய பிரதேச சபைகளின் சிறப்பு ஆணையாளராகவும் கென்யாவுக்கான இலங்கை தூதரகத்தின் பதில் தூதுவராகவும் பணியாற்றியுள்ளமையோடு, உணவு ஊக்குவிப்பு ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் கணபதிப்பிள்ளை மகேசன் பதவி வகித்திருந்தார்.

இலங்கை நிர்வாக சேவையின் சிறப்புத் தரத்தில் உள்ள கணபதிப்பிள்ளை மகேசன், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஊழியர்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு அறிவித்துள்ளது.

பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக நேற்றும் 60க்கும் மேற்பட்ட ரயில் பயணங்கள் ரத்து செய்யப்படலாம் என முன்னதாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை ரயில்வே திணைக்களம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## முட்டை இறக்குமதிக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் (ACBOA) தெரிவித்துள்ள நிலையில், அமைச்சரவை இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

முட்டைகளை தற்காலிகமாக இறக்குமதி செய்வது, தற்போது நிலவும் முட்டை நெருக்கடிக்கு தீர்வாக இருக்கும் எனவும், ஒரு முட்டையை ரூ.30க்கு விற்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய தட்டுப்பாடு செயற்கையாக பண்ணையாளர்களால் உருவாக்கப்பட்டதாக கூறப்படும் நிலையில், முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டவுடன் செயற்கை தட்டுப்பாடும், கண்மூடித்தனமான விலை அதிகரிப்பும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கையின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தும்?

இதுவரை, இந்த நாடுகள் எதிர்கொள்ளும் கடன் நெருக்கடி உலகளாவிய நெருக்கடியை உருவாக்கும் அளவுக்கு குறிப்பிடத்தக்க அளவை எட்டவில்லை. சாட் (Chad), எத்தியோப்பியா, சாம்பியா, கானா, லெபனான், சாம்பியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் கடுமையான கடன் நெருக்கடியை எதிர்கொள்கின்றன. அதற்கான தீர்வுகளைத் ஆராய்ந்து வருவதை அந்த நாட்டு மக்களுக்குச் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், தற்போது இது உலகளாவிய பரவல் இல்லை. ஆனால், சுமார் 25 வீதம் வளரும் நாடுகள் இவ்வாறு கடன் நெருக்கடியைக் நோக்கி நகர்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த நாடுகளின் பட்டியல் இப்படியே வளர்ந்தால், அது உலகளாவிய நெருக்கடியாக மாறும் அபாயம் உள்ளது.

எனவேதான் சர்வதேச நாணய நிதியம் கடன் நெருக்கடிக்கு தீர்வு காண கடுமையாக உழைத்து வருகிறது. அதற்காக, பரிஸ் கிளப் போன்ற பாரம்பரிய கடன் வழங்குநர்கள் மற்றும் சீனா, இந்தியா மற்றும் சவுதி அரேபியா போன்ற பாரம்பரியமற்ற கடன் வழங்குநர்களுடன் நாங்கள் பணியாற்றி வருகிறோம். – என்றார்.

## அமெரிக்க குடியுரிமைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவுக்கு அமெரிக்கா செல்வதற்கான விசா இல்லை.

இந்நிலையில் ராஜபக்ஷ தனது அமெரிக்க குடியுரிமையை மீள வழங்குமாறு அமெரிக்க வெளியுறவுத்துறையிடம் தனது வழக்கறிஞர்கள் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், 2019 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அவர் கைவிட்ட அவரது அமெரிக்க குடியுரிமையை மீட்டெடுப்பதற்கான கோரிக்கை இன்னும் அமெரிக்க அதிகாரிகளால் பரிசீலிக்கப்படவில்லை என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

2022 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தின் போது இலங்கையில் இருந்து தப்பிச் சென்ற போது எந்தவொரு நாடும் புகலிடம் வழங்கத் தவறியதையடுத்து, தனது அமெரிக்க குடியுரிமையை மீட்டெடுக்குமாறு கோட்டாபய ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அமெரிக்க குடியுரிமைக்கான முன்னாள் ஜனாதிபதியின் முயற்சிகள் இன்னும் வெற்றிபெறவில்லை என்பதை அமெரிக்க தூதரகத்தின் ஆதாரம் உறுதிப்படுத்தியுள்ளது என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது




காலைக்கதிர்
Kalaikkathir

# கடனை திருப்பிச் செலுத்துவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்ற மக்களுக்கு நிவாரணங்கள்!

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு

வணிக வங்கிகளில் பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதில் சிரமங்களை எதிர்நோக்கும் மக்களுக்கு நிவாரணத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

கடன் பெற்றவர்கள் கோரும் வகையில் கடன்களை செலுத்துவதற்கு வசதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள 43 லட்சம் குடும்பங்கள் அரசாங்கத்திடம் நிவாரண உதவியை கோரியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வரி அறவிடல் ஊடாகவே நிவாரணம் வழங்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருளாதார மட்டத்தில் உயர் நிலையில் உள்ள 10 சதவீதமானோரிடமிருந்து உதவிகளை பெற்று நடுத்தர அல்லது ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க புதிய வரிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அரச வருமானத்தை 14 சதவீதமாக தக்கவைத்துக்கொள்ள பெறுமதி சேர் வரி 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.



# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை சிறந்த இலக்கை நோக்கி நகர்த்துவார்!

## ருவன் விஜேவர்த்தன அபரிமித நம்பிக்கை

இலங்கை எனும் கப்பலை இலக்கிற்கு வழிநடத்த ஒரு சிறந்த கப்டன் ஒருவர் கிடைக்கப் பெற்றுள்ளார்.

இலங்கை எனும் கப்பலை புதுப்பித்து, உயிரூட்டி இருப்பதுடன் கப்பலை அதன் பயண இலக்குக்கு வழிநடத்த ஒரு சிறந்த கப்டன் ஒருவரும் கிடைக்கப் பெற்றுள்ளார் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு கம்பஹா பிரதேசத்தில் மத வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

பொருளாதார வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை பொறுப்பேற்று முன்னெடுத்துச்செல்ல அனைவரும் பின்வாங்கிய நிலையில், மூழ்கிக்கொண்டிருந்த கப்பலை மீட்டது, ஜனாதிபதி பதவியின் கடினமான பொறுப்பைத் தயக்கமின்றி தோல்மீது சுமந்துகொண்டவர் ரணில் விக்கிரமசிங்கவாகும்.

அத்துடன் ஆயிரக்கணக்கான சவால்களை எதிர்கொண்ட ஜனாதிபதி, செயற்படுத்திய வேலைத்திட்டங்கள் காரணமாகவே கப்பல் மீண்டும் புதுப்பித்து உயிரூட்டப்பட்டிருக்கின்றது.



அதனால் கடந்த வருடத்தில் பெற்றுக் கொண்ட பாரிய அனுபவங்களுடனே புது வருடத்துக்கு கால் எடுத்து வைக்கின்றோம். எனவே, நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண நாங்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். – என்றார்.

# இரண்டு பிள்ளைகளின் தந்தையை மண் வெட்டியால் வெட்டி காயப்படுத்திய மாணவனுக்கு விளக்கமறியல்

திருகோணமலை– மஹதிவுல்வெள பகுதியில் இரண்டு பிள்ளைகளின் தந்தையை மண்வெட்டியால் வெட்டி காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவனை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் மேற்படி மாணவனை முன்னிலைப்படுத்திய போது இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் அதே பகுதியைச் சேர்ந்த பிரகமுவ றாலலாகே ரிவிது சதுஸ்க (வயது – 16) எனவும் தெரிய வருகின்றது. சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது–

விடுமுறை தினங்களில் மாணவன் மஹதிவுல்வெள குளத்திற்கு மீன்பிடிப்பதற்காக செல்பவர் எனவும், மீன்பிடி சங்கத்தில் அங்கத்துவம் இல்லாதவர்கள் மீன்பிடிக்கத் தடை என தாக்குதலுக்கு உள்ளானவர் கூறியமையையடுத்து இருவருக்கும் இடையில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மாணவன் வீதியோரத்தில்நின்றபோது இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அருகில் உள்ள வீட்டில் மண்வெட்டி வீட்டோரத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையில் மண் வெட்டியை எடுத்துக் கொண்டு சென்று சம்பந்தப்பட்ட நபரை வெட்டினார் எனவும் ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை தலையில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் நீதிவான் முன்னிலையில் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து மாணவனை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கட்டளையிட்டார்.

# நாடளாவிய ரீதியில் விசேட பஸ் சேவைகள் ஆரம்பம் போக்குவரத்து பிரச்சினைக்கு 1955 இற்கு அழைக்குக!

புத்தாண்டை முன்னிட்டு கிராமங்களுக்கு செல்லும் மக்களுக்காகவும் மேலும் கிராமங்களுக்குச் சென்று மீளவும் கொழும்பு திரும்பும் மக்களுக்காகவும் நாடளாவிய ரீதியில் மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலன் மிராண்டா தெரிவித்துள்ளார்.

அதன்படி, கடந்த முதலாம் திகதிக்கு பின்னர் கிராமங்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் கொழும்புக்கு வருவதற்கு பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பயணிகளின் தேவைகளை எவ்வித அசௌகரியமும் இன்றி நிறைவேற்றும் வகையில் கொழும்பில் இருந்து வெளிமாகாணங்களுக்கு பஸ் சேவை அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் பயணிகள் 1955 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் பயணிகளின் போக்குவரத்து பிரச்சினைகள் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு அறிவிக்க முடியும் எனவும் இதன் மூலம் பயணிகள் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தாண்டை முன்னிட்டு இலங்கை போக்குவரத்து சபை விசேட பஸ் சேவையையும் ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அதன் பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ண ஹன்ச கொழும்பு பிரதான பஸ் நிலையத்தில் இருந்து நேற்றுமுன்தினம் முதல் இன்றுவரை இந்த விசேட பஸ் சேவை இடம்பெறவுள்ளது. அதன்படி, கிராமங்களுக்குச் சென்று கொழும்பு திரும்பும் மக்களுக்காக நாடளாவிய ரீதியில் மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அவர் கூறினார்.

# திபெத் ஆன்மீகத்தின் தலைவர் தலாய் லாமாவுக்கு இலங்கை வரக் கோருகின்றனர் பௌத்த பிக்குகள்!



பொருளாதார சிக்கலில் உள்ள இலங்கைக்கு பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கையின் பௌத்த பிக்குகள், திபெத்தின் ஆன்மீக தலைவர் தலாய் லாமாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவின் புத்த காயாவுக்கு பயணம் செய்திருந்த இலங்கையின் முக்கிய பிக்குகள் குழுவினரே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கடந்த வாரத்தில் அவர்கள், தலாய் லாமாவை சந்தித்தனர். ராமாண்ய மகா சங்கத்தின் பிரதம மதகுரு மாஹூல்வேவே விமல தேரர் உட்பட்டவர்கள் இந்தப் பயணத்தில் இணைந்திருந்தனர்.

தலாய் லாமா, இந்தியாவின் புத்த காயாவுக்கு வந்தமை காரணமாக அங்கு பெரும்பாலானவர்கள் பயணம் செய்கின்றனர். இந்த நிலையில் அவர் இலங்கைக்கு வரவேண்டும். அவர் இலங்கைக்கு பயணம் செய்தால், அவரை பின்பற்றி பலர் இலங்கைக்கு பயணம் செய்வர்.

இதனால் இலங்கையின் சுற்றுலாத் துறை முன்னேற்றம் அடைந்து நாடு பொருளாதாரத்தில் சிறக்கும் என்று விமல தேரர் உட்பட்ட குழுவினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் இலங்கையின் பௌத்த பிக்குகளின் கோரிக்கையை தலாய் லாமா ஏற்றுக்கொண்டாரா என்ற தகவலை குறிப்பிடவில்லை.

ஏற்கனவே 2015 ஆம் ஆண்டு தலாய் லாமாவின் இலங்கை பயணம் ஏற்பாடு செய்யப்பட்டபோதும், சீனாவின் எதிர்ப்பால் அது கைவிடப்பட்டது.

ஒரே சீனக் கொள்கைக்கு இணங்கி, இந்த முடிவை எடுத்ததாக இலங்கை அரசாங்கம் அப்போது அறிவித்திருந்தது.

தற்போதும் சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்புக்கு சீனாவின் உதவி அவசியமான நிலையில், இலங்கை அரசாங்கம், இதற்கு இணங்குமா? என்பது கேள்விக்குரிய விடயமாகவே கருதப்படுகின்றது.

# சாரதி அனுமதிப் பத்திரத்தை இனி கியூ.ஆர். குறியீட்டுடன் வழங்க முடிவு!

கியூ.ஆர். குறியீடு கொண்ட சாரதி அனுமதி பத்திரத்தை அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் போது 'கியூ.ஆர்.' குறியீட்டுடன் கூடிய உரிமமும் வழங்கப்படும் என அதன் ஆணையாளர் கோபி டி சில்வா தெரிவித்துள்ளார்.

வாகனங்களின் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் வாகனப் பதிவுகள் கடந்த வருடம் குறைந்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.01.2023இல் வெளியிடப்பெற்றது.